[1993 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 186, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

186—

அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் நடத்தப் படும் விளையாட்டுப் போட்டிகள்.

* 10889—திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டி கள் நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து நடைபெற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்து அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) போக்குவரத்துக் கழகங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் 1989 ஆம் ஆண்டுவரை நடந்து வந்திருக்கின்றன. பணநெருக்கடி காரணமாக விளையாட்டுப் போட்டிகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன,

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒரு பொற்கால ஆட்சியை நடத்தி வருகின்ற, தமிழகத்தினுடைய வரலாற்றில் அனைத்துத் துறைகளிலும் புதுமைகளைப் புகுத்தி, ஒரு எழுச்சியான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற தேசியத் தலைவியாய், தமிழகத்தை இன்றையதினம் இந்தியாவிலேயே ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்கி ஆசியாவின் அரசி என அழைக்கப்படுகிற அளவுக்கு ஒரு நேரு விளையாட்டு அரங்கினை உருவாக்கி, விளையாட்டு துறைக்கு என்று இன்றைய தினம் தமிழகத்தில் ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்திருக்கின்ற, விளையாட்டு வீரர் களுக்கெல்லாம் இன்றையதினம் தமிழகத்திலே ஒரு புத்துணர்வு பெற்றுத் தந்திருக்கின்ற, எங்களின் இதய தெய்வம் தமிழக நிரந்தர முதல்வர், புனிதத் தாய், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தமிழகத்திலே இருக்கிற போக்குவரத்துக் கழகங்களில் இருக்கிற விளையாட்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வீரர்களெல்லாம் கடந்த திமுக ஆட்சியில் நிறுத்தப்பட்டு அதனால் பாதிக்கப்பட்டுள்ள அந்த விளையாட்டு வீரர்களுடைய திறமைகளெல்லாம் வெளிக்கொண்டு வர மீண்டும் புத்துயிர் தந்து, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில். .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜன்பாபு, கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் ரொம்ப விரிவாகப் பேசும் போது, திசை மாறிப் போகும்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலாவது மீண்டும் அந்த விளையாட்டு வீரர்களுக்கெல்லாம் ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்து, அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து, போக்குவரத்துக் கழக விளையாட்டுத் துறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு மீண்டும் அந்த விளையாட்டினை நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் சுழல் முறையிலே அந்த விளையாட்டுப் போட்டிகளை 1982லேயிருந்து 1989 வரையிலும் நடத்தினார்கள். முன்னாள் ஆட்சிக் காலத்திலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம், நிதி நெருக்கடி ஏற்படுகிறபோது, விளையாட்டுப் போட்டிக்காக மட்டும் செலவு செய்வது அல்ல. விளையாட்டு துறையிலே தேர்ச்சி பெற்றவர்களை நாம் பணியிலே அமர்த்த வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கவேண்டியிருக்கிறது. இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்ற காரணத்தினாலே இது நிறுத்தப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மீண்டும் இந்தத் துறையின் சார்பாக நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. கி. இராஜன் பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியிலே முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட, போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் விளையாட்டு வீரர்களுடைய பயிற்சியினை மீண்டும் நம்முடைய ஆட்சி, நிதி நெருக்கடி ஏற்பட்டாலும், இந்த நிதி ஆண்டிலாவது கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1993 மார்ச் 31

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையில் தேர்ச்சி பெற்ற போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு, அவர்கள் மேலும் விளையாட்டுத் துறையில் பயிற்சி பெறவும், முறையாகப் பயிலவும், அவர்களுக்கு சகல வசதியோடு, சம்பளத்தோடு லீவோடு, எல்லாவற்றையும் அளித்து அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும்; சிறப்புப் பயிற்சியாளர்களை வைத்து, பிசிகல் டைரக்டர்களை வைத்து அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும், இன்னும் விளையாட்டுக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய பரிசுகள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வெற்றி பெற்றவர்களுக்கு மட்டும்தான் பரிசு வழங்க முடியும். அத்தனை பேருக்கும் பரிசு வழங்கிவிட முடியாது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல விளையாட்டுத் துறையிலே தேர்ச்சி பெறுவதற்காகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிதி நிலை நெருக்கடியின் காரணமாக அது முந்தைய ஆட்சிக் காலத்திலே நிறுத்தப்பட்டது என்று குறிப்பிட்டேன். நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அதை மீண்டும் அந்த விளையாட்டுத் துறையிலே அவர்களுக்கு ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற குறிப்பினை இங்கே குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் தமிழர்களின் வீர விளையாட்டான சிலம்பு விளையாட்டும், சடுகுடு போன்றவற்றில் விளையாடுகின்ற வீரர்களுக்கும், அதிலும் குறிப்பாக வீராங்கனைகளுக்குப் போக்குவரத்துக் கழகத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராங்கனை யார் என்பதை உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால் அதுவும் அந்த துறையிலே ஏற்றுக் கொள்ளப்படும்.

1993 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைத்துச் சட்ட மன்ற உறுப்பினர்கள் விளையாட்டுப் போட்டிகள் முன்பு நடைபெற்றதைப் போல இந்த ஆண்டும் சட்ட மன்ற உறுப்பினர்கள் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத் தனிக்கேள்வி போடவும், இந்த கேள்வியிலே கேட்க முடியாது. சட்ட மன்ற மானியக் கோரிக்கையின்பொழுது பேசுங்கள்.

வினா எண் 187, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

187—

ஆரணி தொகுதி கூட்டுறவு பட்டு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள்

*10870.—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி கூட்டுறவுப் பட்டுச் சங்கங்களில் உற்பத்தி அதிகமாகி இருப்பு உள்ள பட்டுப் புடைவகளை கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோ-ஆப்டெக்ஸ் கிளை விற்பனை நிலையங்கள் வாயிலாக பட்டு சேலைகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதி நெசவாளர் பெருமக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. சென்ற ஆண்டு மத்தியில் அங்கே பட்டினுடைய விலை ஒரு கிலோவிற்கு 1,200 ரூபாய் வரை சென்றது. ஆனால் தற்போது அந்தப் பட்டினுடைய விலை 900 ரூபாய் என்ற நிலையிலே இருக்கிறது. 1200 ரூபாய் பட்டினுடைய விலை இருந்த பொழுது அந்தப் பட்டைப் பெற்ற நெசவாளிகள் நெய்து கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால்